**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவிநாசி**

**2023 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 10-ஆம், நாள் செவ்வாய்கிழமை**
**CNR No.TNTI12-000097-2014**
**இடைநிலை மனு எண்.864/2022**
**இன்**
**அசல் வழக்கு எண்.125/2014**

எஸ்.பழனிசாமி

...மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

ஆர்.நடராஜ்

...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இறுதியாக 21.09.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.டி.திருநாவுக்கரசு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.பொன்னுசாமி அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

நீதிமன்ற ஆணையரை நியமித்து நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 9-ன்படி, மனுதாரரால்

இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்  தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>:–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர் மேற்கு பக்க சுவற்றை மனுதாரரின் காலியிடத்தில் இடம் விடாமல் அவரது வீட்டின் மேற்கு பகுதியில் கட்டியுள்ளதாகவும், அது ஆக்கிரமிப்பு என்றும், அதனை தாலூக்கா நிளஅளவையரை கொண்டு அளந்து பார்க்க வேண்டும் என்றும், அதனை பொறுத்து நில அளவையர் உதவியுடன் கூடிய ஆணையாளரை நியமனம் செய்து அறிக்கை கொடுக்க உத்தரவிடவேண்டியது அவசியம் என்றும், நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கவில்லை என்றால் மனுதாரருக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்றும், நீதிமன்ற ஆணையரை நியமித்து நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

3) <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>:–

மனு பொய் என்றும், சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்டதை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூப்பிக்க வேண்டும் என்றும், இந்த எதிர்மனுதாரர் மனுதாரரின் நிலத்தின் மேற்கு பகுதியில் எந்த இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறுவது பொய் என்றும், வேண்டுமென்றே மனுதாரர் மனுவில் சொத்து விபரம் குறிப்பிடவில்லை

என்றும், சொத்து விபரத்தை குறிப்பிடாமல் நில அளவையர் உதவியுடனான நீதிமன்ற ஆணையாளர் சொத்தினை அளக்கமுடியாது என்றும், இந்த மனுவானது வழக்கினை காலம் தாழ்த்த 6 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் சொல்வது போல இந்த எதிர்மனுதாரர் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றும், மனுவினை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:-</u>**

5.1.) மனு தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரரை வாதி என்றும், எதிர்மனுதாரரை பிரதிவாதி என்றும் குறித்துரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது வாதியால் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிக்கு எதிராக தொடரப்பட்டுள்ளது.

5.2.) மனு மற்றும் எதிருரையை கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்துக்கொண்டுள்ள சூழ்நிலையில் கட்டளை 26 விதி 9-ன் வகைமுறையை இவ்விடத்தில் குறித்துரைக்கப்படவேண்டியது அவசியமாக உள்ளது.

<u>ORDER 26 RULE 9 OF CPC</u>

9. Commissions to make local investigations.-

In any suit in which the court deems a local investigation to be requisite or proper for the purpose of elucidating any matter in dispute, or of ascertaining the market value of any property, or the amount of any mesne profits or damages or annual net profits, the court may issue a commission to such person as it thinks fit directing him to make such investigation and to report thereon to the court:

Provided that, where the State Government has made rules as to the persons to whom such commission shall be issued, the court shall be bound by such rules.

5.3.) மேற்கண்ட சட்ட வகைமுறையை கவனமாக பரிசீலிக்கையில் தரப்பினர்களுக்கு இடையே பிரச்சனைக்குரிய விசயத்தை முடிவு காண நீதிமன்ற ஆணையாளரை நியமித்து தள ஆய்வு செய்து அறிக்கை சம்ர்ப்பிக்க உத்தரவிடலாம் என்பதை அறியமுடிகிறது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர்மனுதாரர் தன்னுடைய மேற்குபுற சுவற்றினை இடம் விடாமல் கட்டியிருப்பதாகவும், அதன் மூலமாக வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அதனை அளந்து கண்டறிய நிள அளவையர் உதவியுடன் கூடிய ஆணையாளரை நியமிக்க கோரியிருப்பதற்கு பிரதிவாதி தரப்பில் சொத்து விபரம் குறிப்பிடவில்லை என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் சொல்வதுபோல ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை என்று பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது. வாதி தரப்பில் இம்மனுவினை திருத்தி சொத்துவிபரம் மனுவில் சேர்க்கப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் கடந்த 07.01.2023 தேதியில்

மனுவை அனுமதிக்க ஆட்சேபனை இல்லை என்று மேலெழுத்து செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் வாதி தரப்பில் சொல்வது போல மனு சொத்தில் ஆக்கிரமிப்பு ஏதேனும் உள்ளதா என்பதை கண்டறிய நில அளவையர் உடன் கூடிய ஆணையாளரை நியமிக்க வேண்டியது அவசியம் என்ற சூழ்நிலையில் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் திரு.வி.ஹரிஹரன் அவர்களை நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் ஊதியம் ரூ.12,000/- என நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி ஊதியத்தை வரும் 30.10.2023 தேதிக்குள் ஆணையாளருக்கு செலுத்தி அதற்கான குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். தவறும்பட்சம் மனு தள்ளுபடி செய்யப்படும். நீதிமன்ற ஆணையாளர் இரு தரப்பினர்களுக்கு முறையாக எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்துவிட்டு மனு சொத்தினை பார்வையிட்டு அதன் இயல்பினை குறிப்பெடுத்து நிள அளவையர் உதவியுடன் அளந்து இந்நீதிமன்றத்திற்கு அறிக்கை மற்றும் வரைப்படத்தை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையாளரின் ஊதியத்திற்காக **அழைக்க 30.10.2023**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால்

நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 10.10.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.10.10 19:13:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>பிற்சேர்க்கை</u>:–** இல்லை

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.10.10 19:14:02 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

இ.நி.ம.எண்.864/2022
இன்
அ.வ.எண்.125/2014
சீரான/வரைவு உத்தரவு
நாள்.10.10.2023
மா.உ.நீ., அவிநாசி